விடுதலைத் திருநாள்

சிறுவினா

1.இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

- அடிமையாய்த் தவித்துக்கொண்டிருந்த இந்தியத்தாய் சினத்துடன் எழுந்து,
- தன்னுடைய கை விலங்கை உடைத்து,
- பகைவரை அழித்து,
- தன்னுடைய அவிழ்ந்த கூந்தலை முடித்து,
- தன் நெற்றியில் திலகமிட்டுக் காட்சியளிக்கிறாள்.

2. கவிஞர் மீரா பற்றி நீவீர் அறிந்த செய்திகளை எழுதுக.

இயற்பெயர் : மீ. இராசேந்திரன்

பணி : கல்லூரிப் பேராசிரியர்

நடத்திய இதழ் : அன்னம் விடு தூது

படைப்புகள் : ஊசிகள், மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம், கோடையும் வசந்தமும்.

3. விடுதலைத் திருநாள் குறித்து கவிஞர் மீரா குறிப்பிடுவது யாது?

உயிரற்ற பிணங்களைப் போல் கிடந்த நாட்டு மக்கள் அனைவரையும் பிடித்திருந்த அறியாமை என்னும் உறக்கத்தை ஓட ஓட விரட்டிய நாள் இன்று என்று கவிஞர் மீரா கூறுகிறார்.

4. எவ்வாறு பூபாள இசை பாடப்படுவதாகக் கவிஞர் மீரா கூறுகிறார்?

பகைமை என்னும் முள் காட்டினை அழித்து, அங்கு விளைந்த மூங்கிலைப் புரட்சி என்னும் புல்லாங்குழலாக்கி மூச்சுக்காற்றால் பூபாள இசை பாடுவதாகக் கவிஞர் மீரா தெரிவிக்கிறார்.